

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 231 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 19 – திங்கள்கிழமை 01 ஏப்ரல் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 231 : Thiruvalluvar Year - 2055 - Panguni 19 - Monday 01 April 2024 - Chennai 16 Pages ₹ 5.00









கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.3.2024) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியை அடுத்த சின்னியம்பாளையத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் நாமக்கல் தொகுதி வேட்பாளர் மாதேஸ்வரன் அவர்களையும், ஈரோடு தொகுதி வேட்பாளர் பிரகாஷ் அவர்களையும், கரூர் தொகுதி வேட்பாளர் செல்வி.ஜோதிமணி அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டாக்டர். மா.மதிவேந்தன், திருமதி.கயல்விழி செல்வராஜ், கழகத் துணைப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ், மாவட்ட கழகச் செயலாளர்கள் ராஜேஷ்குமார், திருப்பூர் செல்வராஜ், நல்லசிவம், பத்மநாபன், மதுரா செந்தில், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான கொங்கு ஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்துல்லா, சின்ராஜ், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், காந்திராஜன், இளங்கோ, திருமதி.சிவகாமசுந்தரி உள்ளிட்ட முன்னாள் – இந்நாள் உறுப்பினர்கள், இந்தியா கூட்டணியின், ஒருங்கிணைந்த நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடும்

# மக்கள் விரோத பா.ஜ.க.வை வேரோடு வீழ்த்துவோம்!

## ஈரோடு பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

ஈரோடு, ஏப்.1–

**“தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டைப் போடும் மக்கள் விரோத பா.ஜ.க.வை வேரோடு வீழ்த்துவோம்” என்று ஈரோடு பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் குறிப்பிட்டார்.**

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியை அடுத்த சின்னியம்பாளையத்தில் நேற்று (31–03–2024) நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் நாமக்கல் தொகுதி வேட்பாளர் மாதேஸ்வரன் அவர்களையும், ஈரோடு தொகுதி வேட்பாளர் பிரகாஷ் அவர்களையும், கரூர் தொகுதி வேட்பாளர் செல்வி.ஜோதிமணி அவர்களையும் அறிமுகப்படுத்தி, இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு எழுச்சி உரையாற்றினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

”பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம் ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார் என்று முத்தமிழறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்ட தந்தை பெரியார் பிறந்த மண்ணிற்கு வந்திருக்கிறேன்! திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் பேரியக்கத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா பணியாற்றிய ஈரோட்டிற்கு வந்திருக்கிறேன். நம்மை எல்லாம் ஆளாக்கிய முத்தமிழறிஞர் கலைஞரின் குருகுலத்திற்கு வந்திருக்கிறேன்! இத்தகைய பெருமைமிகு மண்ணில் நடைபெறும் இந்த பிரம்மாண்டமான பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் அனைவர்க்கும் என் மாலை வணக்கம்!

இந்த மண்ணிற்குத்தான் எத்தனை எத்தனை பெருமைகள் உண்டு! வெள்ளையரை எதிர்த்துப் போர் நடத்திய மாவீரன் தீரன் சின்னமலை மண்! ”தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவற்கொரு குணமுண்டு என்று உணர்ச்சிக் கனலை எழுப்பிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் மண்! சேரர்களின் தலைநகராகத் திகழ்ந்த மண்! இப்படி ஈரோடு – நாமக்கல் – கரூர் ஆகிய மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளையும் கொண்ட இந்த மண்ணிலிருந்து, நாடு காக்கும் ஜனநாயகப் போர்க்களத்திற்கு அழைப்பு விடுக்க வந்திருக்கிறேன். இந்தக் கூட்டமானது முக்கடல்களும் ஒன்று கூடியது போன்று காட்சியளிக்கிறது.



### பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஈரோடு தொகுதி வெற்றி வேட்பாளர் தம்பி பிரகாஷ் அவர்கள், சிறு வயதில் இருந்தே தி.மு.க.வில் இணைந்து மக்களுக்காகப் பணியாற்றுபவர். அவரின் தந்தை 1977–ஆம் ஆண்டு முதல் கிளைச் செயலாளராகப் பணியாற்றியவர். அப்பாவைப் போன்றே மகனும் அரசியல் ஆர்வம் கொண்டவர். என்னுடைய தலைமையில், ஈரோடு தி.மு.க. இளைஞரணி அமைப்பாளராகப் பணியாற்றிய இவர். இப்போது மாநிலத் துணைச் செயலாளராகத் தம்பி உதயநிதிக்குத் துணையாக நிற்கிறார். இவர் ஈரோட்டு மக்களுக்காக – துணையாக நிற்க நாடாளுமன்றத்தில் பணியாற்ற பிரகாஷ் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கரூர் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் சகோதரி ஜோதிமணி அவர்கள் கடந்த முறை 4 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார். இந்த முறை அதைவிடவும் கூடுதலான வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும். மகளிர், குழந்தைகள் மற்றும் சமூக மேம்பாடுகளில் அக்கறை கொண்ட அவரை, நாடாளுமன்றத்திற்கு மீண்டும் அனுப்ப, கரூர் மக்கள் ஜோதிமணி அவர்களுக்குக் கை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாமக்கல் தொகுதியில் கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி வேட்பாளர் மாதேஸ்வரன் அவர்கள் பிறந்தது சேந்தமங்கலம் – வாழ்வது நாமக்கல் – திருமணம் செய்து கொண்டது திருச்செங்கோடு என்று, மூன்று சட்டமன்றத் தொகுதிக்குத் தொடர்புடையவர். மக்களோடு மக்களாக இருந்து சமூக சேவையும் செய்யும் அவரை, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு கூடியிருக்கும் உங்கள் எழுச்சியைப் பார்க்கும்போது மேடையில் இருக்கும் மூன்று வேட்பாளர்களுக்கும் பல இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில், மாபெரும் வெற்றியைத் தர முடிவு செய்துவிட்டீர்கள் என்பது தெரிகிறது. வெற்றி பெற வைக்கத் தயாரா?


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


### பா.ஜ.க. டைரக்‌ஷனில் நடக்கும் அ.தி.மு.க பா.ஜ.க. கூட்டணி!

**இப்படிப்பட்ட ஊழல் ஆட்சியை நடத்தி – கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத பிரதமர் மோடி ஊருக்கு உபதேசம் செய்யலாமா? பா.ஜ.க. டைரக்‌ஷன்–இல் நடக்கும் அ.தி.மு.க – பா.ஜ.க. கள்ளக்கூட்டணிக்கு, பாதம்தாங்கி பழனிசாமி புதியதாக ஒரு கதை சொல்லியிருக்கிறார்! டயலாக் என்ன தெரியுமா? பா.ஜ.க.வின் கூட்டணியில் இருந்ததால், விமர்சிக்க மாட்டாராம்! என்ன ஒரு பதில்! உண்மை அது இல்லை! அவரால் ஒருபோதும் பிரதமர் மோடியையோ – அமித்ஷாவையோ – ஆளுநரையோ – ஏன், பா.ஜ.க.வில் இருக்கும் யாரையும் விமர்சிக்க முடியாது. ஏன், என்றால் எஜமான விஸ்வாசம்! பதவி சுகத்திற்காகவும் – ஊழல் வழக்குகளில் இருந்து தப்பிக்கவும் – பா.ஜ.க.வின் அத்தனை மக்கள் விரோதத் திட்டங்களையும் ஆதரித்தவர் பழனிசாமி!**